பரபரப்பு. பயம். பதட்டம். பணம். போலிஸ். போட்டாபோட்டி.

ஆண்டிபட்டி / இடைத்தேர்தல்

# The C&C Poll

in collaboration with
Visual Communication Department, Loyola College, Chennai

கருத்துக் கணிப்பு

surprises...
shocks...

கூட்டணிக் கட்சிகள் பிரிந்தது அதிமுகவுக்கு ஆதாயம்தான்?

முகவரியில்லாத புதிய தமிழகம்?

**ரஜினி ரஜினிதான்!**

defying old beliefs

பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தால்...?

emerging new trends

திமுக பக்கம் தலித்துகள்?

ஜெயிக்கப்போவதாகச் சொல்லுபவர்கள் ஓட்டுப்போடுவார்களா?

வைகை சேகரால் அசைக்கமுடியாத கோட்டை எது?

சாதிக் கட்சியாகச் சுருங்கும் அபாயத்தில் மதிமுக?

the C&C Poll
welcome for the press meet
to know the results

***இடம்:*** பண்பாடு-மக்கள் தொடர்பகம்
லொயோலா கல்லூரி வளாகம், சென்னை

***நாள்:*** 15.02.2002, காலை 10.30 மணி

ஆண்டிபட்டி இடைத்தேர்தல்


# The C&C Poll

(ஜெயலலிதா & கருணாநிதி பிரச்சாரத்துக்கு முன் நிலவரம்)

லொயோலா கல்லூரியின் பண்பாடு–மக்கள் தொடர்பகமும் காட்சித் தகவலியல் துறையும் இணைந்து, பேரா. ச. ராஜநாயகம் தலைமையில் பதினோரு பேர் அடங்கிய குழு மேற்கொண்ட கருத்துக் கணிப்பு 12.02.02 அன்று நிறைவுற்றது. ஆண்டிபட்டி தொகுதியின் அனைத்துக் கிராமங்களும் ஆறு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, வட்டத்திற்கு நான்கு கிராமங்கள் வீதம் 24 கிராமங்களிலும் ஆண்டிபட்டி நகரிலும் 1208 பேரிடம் (30% பெண்கள்) கணிப்பு நடத்தப்பட்டது. பண்பாடு–மக்கள் தொடர்பகத்தின் தனிச் சிறப்பான சமூக–உளவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டது. பங்கேற்றோரில் செய்தித்தாள் வாசிக்கும் வழக்கம் இல்லாதோர் 34.1% (வாசிப்போரில்: தினமலர் 22.8%, தினத்தந்தி 20.2%, தினகரன் 10.6%, தினமணி 5%). விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி சன் டிவி (சன் 48.3%, ஜெயா 7.9%, தூர்தர்ஷன் 7.3%, கே–டிவி 7.3%, ராஜ் 2.3%, விஜய் 1.3%. டிவி பார்க்காதோர் 22.2%).


## யாருக்கு வாக்கு?

வாக்காளரில் பெரும்பாலோர் அதிமுகவுக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் எனக் கருதுகின்றனர் (படம்–1). என்றாலும், தாங்கள் யாருக்கு வாக்களிக்கப்போகிறோம் என்பதில் கணிசமாக வேறுபடுகின்றனர் (படம்–2). இதில் குறிப்பிடத்தக்க அம்சம், திமுகவுக்கு வாக்களிக்க முடிவுசெய்துள்ளோரில் 45.5% அதிமுகவே ஜெயிக்கும் என்று கருதுவதாகக் கூறியுள்ளதாகும் (திமுகவுக்கு வாக்களிப்போரில் அதிமுக ஜெயிக்கும் என்போர் 45.5%, திமுக ஜெயிக்கும் என்போர் 45.5%, மதிமுக 1%, வேறு பதில்கள் 8%). இது திமுகவினரிடம் மேலோங்கியுள்ள தன்னம்பிக்கைக் குறைவைக் காட்டுகிறது.





படம்–1
வெற்றிவாய்ப்பு யாருக்கு?

படம்–2
வாக்களிக்கப் போவது யாருக்கு?




சாதிரீதியாக வாக்கு:

வாக்காளரிடையே சாதிரீதியான சில உறுதியான போக்குகளைக் காணமுடிகிறது. தாழ்த்தப்பட்டோர் வாக்குகள் பெரும்பான்மை திமுக பக்கமும் (படம்–3), முக்குலத்தோர் வாக்குகள் மிகப் பெரும்பான்மை அதிமுக பக்கமும் (படம்–4) சாய்ந்துள்ளன.




படம்–3


தாழ்த்தப்பட்டோர் வாக்கு




படம்–4


முக்குலத்தோர் வாக்கு

கன்னடம் பேசும் கவுண்டர் வாக்குகள் மிகப் பெரும்பான்மை அதிமுகவுக்கே செல்கின்றன (படம்–6). தெலுங்கு பேசும் நாயுடு–ரெட்டி இனத்தவர் வாக்குகள் பெரும்பான்மை அதிமுக பக்கம் இருந்தாலும் (படம்–5), மதிமுகவின் வாக்குகளில் 39.3% இந்த இனத்தவர் வாக்குகளே (மதிமுக வாக்கு: நாயுடு–ரெட்டி 39.3%, தாழ்த்தப்பட்டோர் 10.7%, முக்குலத்தோர் 10.7%,கவுண்டர் 3.6%, பிற உதிரி சாதியினர் மற்ற வாக்குகள்). இது மதிமுக ஒரு சாதிக் கட்சியாக அடையாளப்படுத்தப்படக்கூடிய இக்கட்டான சூழலில் இருப்பதைக் காட்டுகிறது. அவ்வாறே புதிய தமிழகம் கட்சியின் சொற்ப வாக்குகள் மொத்தமும் தாழ்த்தப்பட்ட இனத்தினருடையவை மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.




படம்–5

நாயுடு~ரெட்டி வாக்கு




படம்–6

கவுண்டர் வாக்கு

வயதும் வாக்கும்:

ஆண்களும் பெண்களும் திமுகவை விட அதிமுக பக்கமே அதிகம் சாய்ந்திருந்தாலும், பெண்கள் மிக அதிகமாகவே அதிமுகவைச் சார்ந்துள்ளனர் (ஆண்களில்: திமுக 37%, அதிமுக 42.1%. பெண்களில்: திமுக 24.4%, அதிமுக 58.1%). வயது அடிப்படையிலும் அதிமுகவுக்கே அதிகம் ஆதரவு உள்ளது. 25 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞரிடையே மட்டும் திமுகவுக்கு அதிமுகவை விட 2.2% அதிகம் (25 வயதுக்குக் கீழ்: அதிமுக 37.8%, திமுக 40%. இருபத்தைந்துக்கு மேல் 40 வரை: அதிமுக 48.4%, திமுக 31.2%. நாற்பதுக்கு மேல்: அதிமுக 48%, திமுக 34%).

## தொழிலும் படிப்பும் ஏற்படுத்தும் தாக்கம்:

தொழில்ரீதியாக அனைத்துத் தரப்பினரும் அதிமுகவை அதிகம் விரும்புகின்றனர் (விவசாயிகள்: அதிமுக 51.8%, திமுக 29.8%. சுயவேலை செய்வோர்: அதிமுக 41.5%, திமுக 37.7%. மாதஊதியம் பெறுவோர்: அதிமுக 50%, திமுக 38.9%. வேலையற்றோர்: அதிமுக 57.1%, திமுக 28.6%). ஆனால் வாக்களிக்கும் போக்கில் அழுத்தமான தாக்கத்தைக் கல்வி ஏற்படுத்துவது வெளிப்படுகிறது. வாக்காளரின் கல்விநிலைக்கேற்ப, அதிமுகவுக்கு அளித்துவரும் ஆதரவு குறைந்துகொண்டே வருகிறது (ஆரம்பக்கல்வி வரை: அதிமுக 56.6%, திமுக 32.5%. பிளஸ்–2 வரை: அதிமுக 45.5%, திமுக 31.4%. கல்லூரி & தொழிற்கல்வி: அதிமுக 28.3%, திமுக 43.5%).

## பொதுவேட்பாளர் & ரஜினி தலைமையில் மூன்றாவது அணி:

எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தியிருந்தால், அவரைத் தேர்ந்தெடுக்கவும் வாக்காளர்கள் தயாராகவே இருந்துள்ளனர் (பொதுவேட்பாளர் 42.4%, அதிமுக 42.1%, முடிவுசெய்ய முடியாதோர் 15.6%). அவ்வாறே நடிகர் ரஜினிகாந்த் தேர்தல் களத்தில் ஒரு வேட்பாளராக நின்றிருந்தால் அவருக்குப் பெருவாரியாக ஆதரவளிக்கத் தயாராயுள்ள மனநிலை வெளிப்படுகிறது (ரஜினி 47%, அதிமுக 29.8%, திமுக 11.9%, பிறர் 11.3%). ஆனால் ரஜினியே நேரடியாகக் களமிறங்காமல், ஆதரவு மட்டும் அளிப்பதாக இருந்தால், படுதோல்வியையே சந்திக்கவேண்டியிருந்திருக்கும் (ரஜினி ஆதரவு பெற்றவர் 28.1%, அதிமுக 42.7%, திமுக 14.9%, பிறர் 14.3%).

## கூட்டணி ஆதரவு:

அதிமுக கூட்டணியிலிருந்த கட்சிகள் பல பிரிந்துவிட்டாலும், திமுகவை விட அதிமுகவுக்கே கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு அதிகமிருப்பதாக வாக்காளர்கள் கருதுகின்றனர் (அதிமுகவுக்கு 59.6%, திமுகவுக்கு 30.5%). இது திமுக கூட்டணிக் கட்சிகளிடையே சரியான ஒத்துழைப்பும் திட்டமிடுதலும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், அதிமுக கூட்டணியிலிருந்து கட்சிகள் பிரிந்ததால் அதிமுகவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பதே பெரும்பான்மைக் கருத்தாக உள்ளது (பாதிப்பில்லை 54.3%, அவை பிரிந்தது அதிமுகவுக்கு நல்லதுதான் 11.9%, வெற்றிக்கான வாக்கு வித்தியாசத்தில் சிறிது பாதிப்பு 12.3%, வெற்றியை இழுபறியாக்கும் அளவு பாதிப்பு 17.2%).

## ஜெயலலிதா போட்டியிடாத ஆண்டிபட்டி:

இந்த இடைத்தேர்தலில் ஜெயலலிதாவிற்குப் பதில் வேறொரு அதிமுக வேட்பாளர் போட்டியிட்டால், இவ்வளவு பெருவாரியான ஆதரவு அதிமுகவுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அதிமுகவுக்கு வாக்களிப்போரில் 27% ஜெயலலிதா அல்லாத வேறொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தயாராயில்லை எனத் தெரிவித்துள்ளனர். ஜெயலலிதா மட்டுமே ஒரு முதல்வருக்கான வேட்பாளர் என்பதும் அவரால் தொகுதிக்குப் பெருமை என்பதும் அதற்கான முக்கியக் காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## பிரச்சனைகளைத் தீர்க்கும் கட்சி:

ஆண்டிபட்டித் தொகுதிக்கென உள்ள சில அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் நீர்த்தேக்கம் அமைத்தல் முதலிய சில தேவைகளை நிறைவேற்றவும் திறமையுள்ள கட்சியாக அதிமுகவைப் பெரும்பாலான வாக்காளர்கள் கருதுகின்றனர் (அதிமுக 49%, திமுக 24.8%). எனினும் கணிசமான வாக்காளர்கள் யார் ஜெயித்தாலும் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது என்ற கருத்தையும் தெரிவித்துள்ளனர் (19.9%).

## பிரச்சார உத்தியும் தேர்தல் ஆணையமும்:

இந்தத் தேர்தலை முன்னிட்ட பிரச்சாரத்தில் தொலைக்காட்சி, பத்திரிக்கைகள், சுவர் மற்றும் போஸ்டர் விளம்பரங்களில் திமுகவை விட மிக அதிகமான முன்னிலை வகிப்பது அதிமுக என்பது வாக்காளரின் ஏகோபித்த கருத்தாக உள்ளது (தொலைக்காட்சி:

அதிமுக 61.9%, திமுக 19.5%. பத்திரிக்கை: அதிமுக 70.9%, திமுக 13.9%. சுவர் & போஸ்டர்: அதிமுக 79.5%, திமுக 8.6%). மிக ஆடம்பரமாக விளம்பரம் செய்யும் கட்சியாகவும் அதிமுக சுட்டிக்காட்டப்படுகிறது (அதிமுக 80.5%, திமுக 9.6%). வாக்காளர்களைக் கவரும் நோக்கில் பல ''சலுகைகளை'' அளிப்பதிலும் அதிமுக முதலிடம் வகிக்கிறது (அதிமுக 64.6%, திமுக 8.9%, இரண்டும் 13.6%). அதே வேளையில், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் நடுநிலையில் இருப்பதாகப் பெரும்பாலோர் தெரிவித்துள்ளதும் இங்குக் கருதத்தக்கது (தேர்தல் ஆணையம் நடுநிலையில் செயல்படுகிறது 57.6%, அதிமுகவுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது 37.7%, திமுகவுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது 5%).

## நடுநிலையான தொலைக்காட்சி:

தொலைக்காட்சி சேனல்களில் மிகவும் விரும்பிப் பார்க்கப்படுவதாக சன் டிவி இருந்தபோதிலும், தேர்தலை ஒட்டிய நடுநிலையான, நம்பகமான செய்திகளைத் தருகின்ற சேனல்கள் வரிசையில் தூர்தர்ஷன் முதலிடத்தையும் (30.5%), விஜய் இரண்டாமிடத்தையும் (21.9%) வகிக்கின்றன (சன் 20.5%, ராஜ் 12.6%, ஜெயா 8.6%).

## வீணாக வலம்வரும் நடிகர் பட்டாளம்:

திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகளும் ஒன்றுக்கொன்று போட்டியாக நடிகர்களைப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தினாலும், இந்த நடிகர் பட்டாளத்தின் தாக்கத்தால் ''ரசிகர்கள்'' வாக்களித்துவிடுவார்கள் என்பதற்கான ஆதாரமில்லை. தொகுதியின் அனைத்துக் கிராமத்திற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட நடிகர்கள் சென்றிருந்த போதும், அவர்களின் பேச்சை நேரடியாகக் கேட்டுள்ளோர் 51.3% மட்டுமே. அப்படிக் கேட்டுள்ளவர்களில் மிகப் பெரும்பாலோர் நடிகரைப் பார்க்கவேண்டுமென்ற ஆர்வத்தால்தான் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளனர் (வெறும் ஆர்வத்தால் 65.2%, தன் கட்சிக்காரர் என்பதால் 16.8%, நடிகர்களுக்குச் சரியாகப் பேசக்கூடத் தெரியவில்லை என்போர் 6.5%, அவர்களின் பேச்சு சிந்தையைக் கவரக்கூடியதாக இருந்தது என்போர் 8.4%). இது இத் தொகுதி மக்களின் வாக்களிக்கும் போக்கு சினிமாக் கவர்ச்சியின் பாதிப்பிலிருந்து பெருமளவு விடுபட்டிருப்பதைக் காட்டுகிறது.

## முதல்வர் பன்னீர் செல்வத்தின் எதிர்காலம்:

ஆண்டிபட்டி தேர்தலுக்குப் பின், தற்போதைய முதல்வர் பன்னீர் செல்வம் ஜெயலலிதா தலைமையிலான அரசில் ஒரு அமைச்சராக இருப்பார் என 48.3%-ம், அவருக்கு எந்தப் பொறுப்பும் தரப்படாது என 35.8%-ம் தெரிவித்துள்ளனர் (சபாநாயகராவார் 9.3%, துணை முதல்வராவார் 5.6%, முதல்வராகவே தொடருவார் 1%).

## ஏகோபித்த முடிவு:

ஆண்டிபட்டி தொகுதி மக்களிடையே வலுவாக வெளிப்படும் கருத்துப்படி (ஜெயலலிதாவின் பிரச்சாரம் ஆரம்பிக்கும் முதல்நாள் வரையிலான நிலவரம்) அதிமுகவின் வெற்றி நிச்சயமான ஒன்றாக உள்ளது. வாக்காளரின் பல்வேறு பதில்களையும் ஒப்புநோக்கினால், **குறைந்த பட்சம் 26,000 வாக்குகள் வித்தியாசத்தில்** ஜெயலலிதா வெற்றிபெறுவார். தற்போது தொகுதியில் அவர் மேற்கொண்டுள்ள பிரச்சாரத்தின் தன்மைக்கேற்பவும் தேர்தல் நாளன்று பதிவாகப்போகும் வாக்குகளுக்கு ஏற்பவும் இந்த வித்தியாசம் பல மடங்கு கூடுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

பேரா. ச. ராஜநாயகம் & குழு
பண்பாடு-மக்கள் தொடர்பகம் &
காட்சித் தகவலியல் துறை
லொயோலா கல்லூரி
சென்னை 600 034

ஆய்வு முடிவுகளை வெளியிடுபவர்:
டாக்டர். ஜோசப் சேவியர், SJ
லொயோலா கல்லூரி முதல்வர்

15.02.2002